செ.வெ.எண்:731 நாள்: 31.10.2019

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அரசு அலுவலர்கள் தேசிய ஒற்றுமை நாள் உறுதி மொழி மற்றும் நேர்மை உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (31.10.2019) தேசிய ஒற்றுமை நாள் உறுதி மொழி மற்றும் நேர்மை உறுதி மொழியினை ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

சர்தார் வல்லபாய்படேல் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேசிய ஒற்றுமை நாள் உறுதி மொழியானது இந்திய நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய எனது பங்களிப்பை நல்குவேன் என அனைத்துறை அரசு அலுவலர்களும் இன்று உறுதி மொழி ஏற்றனர்.

மேலும் ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு வாரம் 28.10.2019 முதல் 02.11.2019 வரை நடைபெறுகிறது. மேற்கண்ட நாட்களில் மாவட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. www.cvec.nic.in என்ற இணையத்தின் வாயிலாக ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அனைத்து தரப்பினரும் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் நேர்மை உறுதி மொழியினையும் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் டி.சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல், மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் (நீதியியல்) சங்கர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**